Australian Government
Department of Home Affairs

# TPV/SHEV நிரந்தர விசாக்களாக நிலை மாற்றம்

அவுஸ்திரேலிய அரசாங்கம், துணைப்பிரிவு 785 Temporary Protection visa (தற்காலிகப் பாதுகாப்பு விசா (TPV)) மற்றும் துணைப்பிரிவு 790 Safe Haven Enterprise visa (பாதுகாப்புப் புகலிடப் பிரவேசிப்பு விசா (SHEV)) வைத்திருப்போரை நிரந்தர விசாவுக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடையோராக ஆக்கியுள்ளது.

## தகுதி

நீங்கள் Subclass 785 (துணைவகுப்பு 785) Temporary Protection visa (TPV) (தற்காலிகப் பாதுகாப்பு விசா) அல்லது Subclass 790 (துணைவகுப்பு 790) Safe Haven Enterprise visa (SHEV) (பாதுகாப்புப் புகலிடப் பிரவேசிப்பு விசா)-வை **2023 பிப்ரவரி 14ஆம் தேதிக்கு** முன்பாக வைத்திருந்தால் அல்லது விண்ணப்பித்திருந்தால், permanent Subclass 851 Resolution of Status (RoS) (நிரந்தர துணைவகுப்பு 851 நிலைக்கான தீர்வு) விசாவுக்கு நீங்கள் தகுதியுடையவர்களாக இருக்கலாம்.

பாதுகாப்புக் கடமைகளில் நீங்கள் ஈடுபடவில்லையெனில், தகுதிக்காக நீங்கள் காத்திருக்கவோ அல்லது நீதிமன்ற சீராய்வு முடிவுக்காகவோ காத்திருக்கவில்லை எனில், மற்றும் அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து இருப்பதற்கான அனைத்து வழிகளும் தீர்ந்துவிட்டிருந்தால், அவுஸ்திரேலியாவை விட்டு சுயமாக வெளியேற எதிர்பார்க்கப்படுகிறீர்கள். நீங்கள் வெளியேறத் தேவையான உதவி வழங்கப்படக்கூடும்.

### அவுஸ்திரேலியாவுக்கு ஒழுங்கற்ற முறைப் பயணம்

எல்லைகளின் இறையாண்மையைச் செயல்படுத்துவதில் இந்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகள் மாறவில்லை; மாறவும் செய்யாது. ஒழுங்கற்ற முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் பயணிக்க முயற்சிக்கும் யாரும் இங்கு நிரந்தரமாகத் தங்க முடியாது.

செல்லத்தக்க விசா இன்றி அவுஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் பயணிக்க முயற்சிக்கும் யாராயினும், அவர்கள்:

- புறப்பட்ட இடத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள்
- தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் அல்லது
- அவர்களது பாதுகாப்பு உரிமைகோரல்களை மதிப்பிட பிராந்தியச் செயலாக்க நாட்டுக்கு அனுப்பப்படுவார்கள்.

அவுஸ்திரேலியாவின் கடினமான எல்லைப் பாதுகாப்புக் கொள்கைகள் அவுஸ்திரேலியாவின் எல்லைகளைக் காக்கவும், கடத்தல் பேர்வழிகளுக்கெதிராகப் போராடவும், ஆபத்தான படகுப் பயணங்கள் மூலம் திறந்த கடலில் மக்கள் பயணம் செய்யும் முயற்சியைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டவை.

## RoS விசாவுக்கு விண்ணப்பிப்பது எப்படி

**TPV/SHEV விண்ணப்பதாரர்கள் (அதைத் தொடர்ந்து விண்ணப்பிப்பவர்கள் உட்பட)**

| | |
|---|---|
| **விண்ணப்ப நடைமுறை** | 2023 பிப்ரவரி 14ஆம் தேதிக்கு முன்பாக நீங்கள் திணைக்களத்தில் ஒரு TPV/SHEV விண்ணப்பத்தைப் பதிவுசெய்திருந்தால் (அடுத்தடுத்த TPV/SHEV விண்ணப்பம் உட்பட), **நீங்கள் எதுவும் செய்ய வேண்டியதில்லை.** திணைக்களமானது உங்கள் TPV/SHEV விண்ணப்பத்தை RoS விசா விண்ணப்பமாக மாற்றிவிடும். |
| **எனது விண்ணப்பம் மாற்றப்பட்டுள்ளதை நான் எவ்வாறு தெரிந்துகொள்வது?** | திணைக்களமானது உங்கள் TPV/SHEV விண்ணப்பத்தை தானாகவே RoS விசா விண்ணப்பமாக மாற்றிவிடும். உங்கள் விண்ணப்பத்தை திணைக்களம் மாற்றியிருந்தால், உங்களுக்கு அறிவிப்பு எதுவும் வராது. ஏதேனும் மேலதிக தகவல்கள் தேவையெனில் அல்லது உங்கள் RoS விசா வழங்கப்படும்போது திணைக்களம் உங்களைத் தொடர்புகொள்ளும். |

### TPV/SHEV வைத்திருப்போர் (திணைக்களத்துடன் அடுத்தடுத்த TPV/SHEV விண்ணப்பத்தைக் கைவசம் வைத்திருக்காதோர்)

| | |
|---|---|
| **விண்ணப்ப நடைமுறை** | 2023 பிப்ரவரி 14ஆம் தேதிக்கு முன்பாக அவுஸ்திரேலியா வந்த TPV/SHEV வைத்திருப்போர் (திணைக்களத்தில் விண்ணப்பிக்காதோர்) **ImmiAccount வாயிலாக RoS விசாவுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கலாம்**. விண்ணப்பத்தடை நீக்கப்பட்டமைக்கான அறிவிப்பு உங்களுக்குத் தேவைப்படாது. இது மின்னணு படிவத்தில் அடங்கியுள்ளது.<br><br>எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது பற்றிய மேலதிக தகவல்கள் RoS விசா பக்கத்தில் உள்ளது. |
| **காலக்கெடு** | **உங்கள் நடப்பு TPV/SHEV காலாவதியாகும் முன்பாக** RoS விசாவுக்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், நீங்கள் சட்டத்துக்குப் புறம்பானவராக ஆகவும் அரசாங்கச் சேவைகளைப் பெறுவதை இழக்கவும் கூடும். |
| **எனது விண்ணப்பம் பெறப்பட்டுள்ளதை நான் எவ்வாறு தெரிந்துகொள்வது?** | ஒரு செல்லத்தக்க விண்ணப்பத்தை நீங்கள் செய்யும்போது, உங்கள் விண்ணப்பம் பெறப்பட்டதற்கான ஒப்புகைக் கடிதத்தைப் பெறுவீர்கள். செல்லத்தக்க விண்ணப்பமாக அது இல்லாவிடில், அது ஏன் செல்லத்தக்கதல்ல என்பதற்கான காரணம் உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும். |

### முன்பு TPV/SHEV வைத்திருந்தோர்

| | |
|---|---|
| **விண்ணப்ப நடைமுறை** | நீங்கள் முன்பு TPV/SHEV வைத்திருந்தவராக 2023 பிப்ரவர் 14ஆம் தேதிக்கு முன்பாக உங்கள் விசா காலாவதியாகியிருந்தால், **ImmiAccount மூலம் RoS விசாவுக்கு நீங்கள் இணையவழியில்** விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பமானது ஒரு bridging visa (இணைக்கும் விசா) ஆகவும் கருதப்படும். |
| **எனது விண்ணப்பம் பெறப்பட்டுள்ளதை நான் எவ்வாறு தெரிந்துகொள்வது?** | ஒரு செல்லத்தக்க விண்ணப்பத்தை நீங்கள் செய்யும்போது, உங்கள் விண்ணப்பம் பெறப்பட்டதற்கான ஒப்புகைக் கடிதத்தைப் பெறுவீர்கள். செல்லத்தக்க விண்ணப்பமாக அது இல்லாவிடில், அது ஏன் செல்லத்தக்கதல்ல என்பதற்கான காரணம் உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும். |

### அனைத்து RoS விசா விண்ணப்பதாரர்களுக்குமான முக்கிய தகவல்கள்

| | |
|---|---|
| **செலவு** | RoS விசாவுக்கு விசா விண்ணப்பக் கட்டணம் கிடையாது. |
| **எங்கு விண்ணப்பிப்பது** | திணைக்களம் காகித விண்ணப்பப் படிவத்தைப் பதிவுசெய்ய அங்கீகரித்திராத பட்சத்தில், **ImmiAccount வாயிலாக நீங்கள் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.** |
| **விசா தேவைகள்** | அனைத்து RoS விசா விண்ணப்பதாரர்களும் ஆரோக்கியம், தேசப் பாதுகாப்பு மற்றும் நடத்தை தொடர்பான தேவைகளைப் பூர்த்தி |

| | |
|---|---|
| **செலவு** | RoS விசாவுக்கு விசா விண்ணப்பக் கட்டணம் கிடையாது. |
| | செய்ய வேண்டும். 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதிருக்கும் விண்ணப்பதாரர்களும் அவுஸ்திரேலிய விழுமிய அறிக்கையில் கையொப்பமிட வேண்டும்.<br><br>உங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் கூடுதல் தகவல்களுக்காக திணைக்களம் உங்களைத் தொடர்புகொள்ளலாம். இந்தத் தகவல்களில் பெயர், பிறந்ததேதி அல்லது ஆவணப்படுத்தல் போன்றவை உட்பட ஏனைய உங்களது அல்லது உங்கள் குடும்பத்தினர் குறித்த தகவல்கள் அடங்கும்.<br><br>அடையாளம் தொடர்பாகக் கூடுதல் தகவல்களை நாங்கள் கேட்டால், சரியான நேரத்தில் இந்தத் தகவல்களை வழங்குவதற்கு திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுங்கள். இது உங்களது RoS விசா விண்ணப்பத்தை மேலும் விரைவாக இறுதிசெய்ய எங்களுக்கு உதவும். |
| **குடும்பம்** | அதே விண்ணப்பப் படிவத்தில் குடும்ப உறுப்பினர்களும் ஒன்றாக விண்ணப்பிக்கலாம். எனினும் ஒவ்வொரு விண்ணப்பதாரரின் சொந்த உரிமையும் மதிப்பிடப்படும். |
| **சிறப்புச் சூழ்நிலைகள்** | உங்களுக்கு சிறப்பு அல்லது தனித்துவமான சூழ்நிலைகள் ஏற்பட்டு உதவி தேவைப்பட்டால், உங்கள் மாகாணத்தில் அல்லது எல்லைக்குள் உள்ள சமூக அகதி சிறப்பு நிபுணரையும் குடியேற்ற சட்டச் சேவை வழங்குநரையும் தொடர்புகொள்ளுங்கள் (கீழே சேவை வழங்குநர்களின் பட்டியலைக் காணலாம்). |

| **சூழ்நிலைகளில் மாற்றம்** | தகவலுக்கான திணைக்களத்தின் கோரிக்கைகளுக்கு குறிப்பிட்ட காலவரையறைக்குள் பதிலளிப்பதன் மூலம் உங்கள் RoS விசா விண்ணப்பத்தின் நிலை முன்னேற்றத்துக்கு உதவ முடியும். உங்கள் சூழ்நிலைகளில் அல்லது தொடர்பு விபரங்களில் ஏற்படும் மாற்றங்களை உடனடியாக திணைக்களத்துக்குச் சொல்லுங்கள் (https://immi.homeaffairs.gov.au/change-in-situation/contact-details). |
|---|---|

## இலவச விசா விண்ணப்ப உதவி

**இலவச** விசா விண்ணப்ப உதவியில் இந்த நடைமுறைக்கென இந்த அரசாங்கம் $9.4 மில்லியனை இரு ஆண்டுகளில் வழங்கியுள்ளது. அவுஸ்திரேலியாவிலுள்ள சிறப்பு நிபுணர் சமூக அகதி மற்றும் குடியேற்ற சட்டச் சேவை வழங்குநர்கள் இந்த உதவியை இலவசமாக வழங்குவர்.

கட்டாயமில்லை எனினும், உதவி தேவையெனில் RoS விசாவுக்கு விண்ணப்பிக்கும் TPV/SHEV வைத்திருப்போர் தங்களது மாகாண அல்லது பிரதேசத்துக்குட்பட்ட சட்டச் சேவை வழங்குநரைத் தொடர்புகொள்ளலாம்.

| சேவை வழங்குநர் | சேவைபெறும் மாகாணங்கள்/பிரதேசங்கள் | இணையதளம் |
|---|---|---|
| அகதிகள் சட்டம் | விக்டோரியா | www.refugeelegal.org.au |
| Refugee Advice and Casework Service (RACS) (அகதி ஆலோசனை மற்றும் வழக்குப்பணி சேவை) | நியூ சவுத் வேல்ஸ் | www.racs.org.au |
| RACS NSW வசமிருந்து பரிந்துரையின் பேரில் Immigration Advice and Rights Centre (குடியேற்ற ஆலோசனை மற்றும் உரிமைகள் மையம் (IARC)) | நியூ சவுத் வேல்ஸ் | www.iarc.org.au |
| சட்ட உதவி | அவுஸ்திரேலிய தலைநகரப் பிரதேசம் | www.legalaidact.org.au |
| Refugee and Immigration Legal Service (அகதி மற்றும் குடியேற்ற சட்டச் சேவை (RAILS)) | குயின்ஸ்லாந்து | www.rails.org.au |
| சர்க்கிள் கிரீன் | மேற்கு அவுஸ்திரேலியா | www.circlegreen.org.au |
| சட்டச் சேவைகள் ஆணையம் | தெற்கு அவுஸ்திரேலியா | www.lsc.sa.gov.au |
| டாஸ்மேனியன் அகதிகள் சட்டச் சேவை | டாஸ்மேனியா | www.trls.org.au |
| சட்ட உதவி | வடக்குப் பிரதேசம் | www.legalaid.nt.gov.au |

* **குறிப்பு:** உள் விவகாரத் திணைக்களம் விசாவை விரைவுபடுத்த கட்டணம் விதிப்பதில்லை. இந்தச் சேவையை யாரேனும் அளிப்பதாகச் சொன்னால், அது ஒரு மோசடி.

## RoS விசாதாரர்களுக்கான சேவைகளும் பலன்களும்

நிரந்தர RoS விசா அனுமதி பெற்றோர் அனைத்து நிரந்தரக் குடியிருப்போரின் அதே உரிமைகளையும் பலன்களையும் பெறுவார்கள். இதில் காத்திருப்புக் காலம் இருக்காது என்பதுடன் கீழ்க்கண்டவற்றுக்கான உடனடித் தகுதி பெறுவார்கள்:

- **அனைத்து சமூகப் பாதுகாப்பு செலுத்துகைகள்** (www.servicesaustralia.gov.au),
- **தேசிய இயலாதோர் காப்பீட்டுத் திட்டம்** (www.ndis.gov.au), மற்றும்

- **உயர் கல்வி உதவி** (www.studyassist.gov.au).

RoS விசாதாரர்கள் பின்வரும் தகுதி பெறுவார்கள்:

- குடியிருப்பு மற்றும் பிற தேவைகளை அவர்கள் பூர்த்தி செய்ததும் அவர்கள் அவுஸ்திரேலியக் குடிமக்கள் ஆவார்கள்.
- குடியேற்றத் திட்டத்தின் குடும்ப விசா ஓட்டத்தின்கீழ் குடும்பத்தை அவுஸ்திரேலியாவுக்குக் கொண்டுவர நல்கையாளராக இருப்பது.

அங்கீகரிக்கப்படாமல் கடல்வழியாக (UMA) அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்த நல்கையாளர்கள் அல்லது முன்மொழிவோர் இனி குடியேற்றத் திட்டத்தின் குடும்ப விசா ஓட்டத்துக்கு குறைவான நடைமுறையாக்க முன்னுரிமையைப் பெற மாட்டார்கள்.

RoS விசாதாரர்களால் தொடர்ந்து **மெடிகேர்** மற்றும் இலவச மனநல நிபுணரின் உதவியையும் **சித்திரவதை மற்றும் அதிர்ச்சியிலிருந்து தப்பித்தோருக்கான உதவித்திட்டம்** வாயிலாக அணுக முடியும் (www.health.gov.au).

## மேலதிக தகவல்கள்

திணைக்கள இணையதளத்தில் மேலதிக விபரங்கள் உள்ளன:
https://immi.homeaffairs.gov.au/visas/getting-a-visa/visa-listing/resolution-of-status-851